Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal
ISSN: 3049-0723 (Online)

Volume 1, No. 07, April 2025

# Social Violation shown in the Novels of Imaiyam

**Pushparani.P,**
Ph.D. Research Scholar, Department of Tamil, Dr. S.N.S. Rajalakshmi College of Arts and Science (Autonomous), Coimbatore 641049.
Email: anjelpush999@gmail.com

## ABSTRACT

Social customs are the most important magic word in the search for knowledge of human society. The customs, rituals, caste inequalities, sexual relations, divine worship and ceremonies are closely related to human life. These are due to the fact that they are not touched. Imaiyam novel, the biological cultural ethics of the contemporary people reveals. The creator who talks about the events of society speaks of social violations at every time. The dominant castes impose their devotion to the lower castes of the ethics that have been practiced for a long time during the temple worship. Due to the inability of the social value to ignore the instrument, the economic prosperity of the lowly people causes the orders of the dominant caste. Despite the impact of the rituals we have, the cultural elements are worth noting to oppose the dominant castes and they indiscriminately perform rituals. The lowly people are suffering from inevitably and unable to fight. The cultural violations of the dominant caste still get today. The dominant castes exercise caste power over the lower castes and have sexual harassment. The main reason for economic conditions affects the lower castes. This article describes the social violations of various stages of the lower castes and the disadvantages of the lower castes.

## ARTICLE INFO

Received : 20 March 2025
Revised : 30 March 2025
Accepted : 01 April 2025

## KEYWORDS

Community, castes, caste atrocities, poverty, rituals

# இமையம் புதினங்களில் சமூக மீறல்கள்

**புஷ்பராணி.ப,**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை, டாக்டர் எஸ்.என்.எஸ் இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயமுத்தூர் 641049.

மின்னஞ்சல் : anjelpush999@gmail.com

**முன்னுரை**

இன்றைய எழுத்தாளர்களின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களும் இமயமும் ஒருவர் அண்ணாமலை என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் சிறுகதை, புதின இலக்கியங்களை படைத்து வருகிறார். தாழ்த்தப்பட்ட மக்களின் துயரங்களை அடையாளம் காணும் விதமாக இலக்கியங்களை தொடர்ந்து எழுதி வருகிறார். கிராமப்புற, நகர்ப்புற சூழலில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் சாதிய அடக்குமுறைகளையும், அத்துமீறல்களையும் எடுத்துரைக்கிறார். மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வழிபாடுகள், சடங்குகள் சாதிய அடக்குமுறை ஆகிய பண்பாட்டுக் கூறுகளை தன் புதினங்களிலும், சிறுகதைகளிலும் சமூகத்தை காட்டும் இவர் சமூக மீறல்களையும் வலுவாக பேசுகிறார். ஆதிக்க சாதியினரின் பண்பாட்டு மீறல்களினால் தாழ்த்தப்பட்ட மக்களின் மீது பல்வேறு விதமான சிக்கல்களை தொடுக்கிறது. சமூக மீறல்களால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்படும் தீமைகளையும், சமூக சிக்கல்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்குமாகும்.

**குறிப்புச் சொற்கள் :** சமூகம், சாதிகள், சாதிக் கொடுமைகள்,வறுமை,சடங்குகள்.

**சமூகம்**

சமூகம் என்பதே பல இனங்களின் கூட்டமைப்பாகும். சமூகத்தில் சாதிகளாக பிரிந்து வாழும் மக்கள் பல்வேறு வகையான பழக்கவழக்கங்களை மேற்கொள்கின்றனர். சமூகத்தில் உயர்ந்த மதிப்பில் உள்ளவர்கள் பொருளாதாரத்தில் நிறைவுடன் இருக்கிறார்கள். அவர்களைச் சார்ந்த பிற தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரத்திலும் ஒடுக்குதல்களுக்கும் ஆளாகி பிரிவினையுடன் தொகுப்பான மக்களாக வாழ்கின்றார்கள். இதனையே கேசவன் அவர்களும் குறிப்பிடுவதை,

> "சாதிகளின் தொகுப்பு என்ற வரையறையைத் தாண்டி பொருளாதாரம், சமூக ஒடுக்குதலுக்கும் உள்ளாகும் அனைத்து சமூக பிரிவினரையும் குறிப்பிடுகிறது" *(*கோ கேசவன் சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும் ப *- 24)*

காண முடிகிறது. சமூகம் சாதி அமைப்புகளின் தொகுப்புகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் மேம்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்குகிறார்கள். மிக முக்கிய காரணமாக அவர்களைச் சார்ந்த பொருளாதாரத்தை ஓரளவேனும் நிவர்த்தி செய்ய கூடிய வகையில் போதுமானதாக தன்னிறைவு அடைகிறார்கள். இதற்கு காரணம் சமூகம் சாதிகளாக பிரிந்து காணப்படுவதற்கு பொருளாதாரமே ஆகும். பொருளாதாரமே சாதி எடுத்து தாழ்த்தப்பட்டவர்கள் ஒடுக்குதல் கொடுக்கும் தாக்குதலுக்கும் ஆளாவது அனைத்து சமூக பிரிவினரையும் சார்ந்ததாகவே இன்று உள்ளது.

**சாதி விளக்கம்**

சாதி என்பது ஒரே வகையான பழக்கவழக்கங்களைக் கடைபிடிக்கின்ற மக்களுடைய கூட்டுத் தொகுதியாகும். கூட்டமாக இருந்த சமூகம் பிளவு பட்ட சமூகமாக வளர்ச்சி அடைந்ததின் நீட்சியே சாதியாகும். ஒவ்வொரு சாதிக்கும் தனியான சிறப்புகளைச் சாதி மரபு வழியான தொழில் பாகுபாட்டால் மற்றவர்களுக்கு எதிராகச் செயல்படுகின்றது. இதனை,

> "சமுதாயத்தில் ஒவ்வொரு சாதிக்கும் என தண்ணீர் தகுதி நிலை நிர்ணயிக்கப்பட்டு பின் அனைத்து சாதிகளும் ஒரு படி நிலையில் அமைக்கப்பட்டுள்ளன இப்படி நிலையில் மேலுள்ள சாதி உயர்ந்தது என்றும் அதற்கு அடுத்துள்ள சாதி தாழ்ந்தது என்றும் அமைக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு சாதியினரும் மற்ற சாதியினரோடு எவ்வகையான செயல் உறவு கொள்ள வேண்டும் என்பதும் ஒருவருக்கொருவர் எவ்வகையான இடைவினை புரிய வேண்டும் என்பதும் மரபு வழி வழக்கத்தால் மிகவும் உறுதியோடு செயல்படுத்தப்படுகின்றன" (பண்பாட்டு மானுடவியல் ப - 314)

என மானிடவியலாளர் பக்தவச்சல பாரதி எடுத்துரைக்கிறார்.

தனித்தனியான சிறப்பு நிலைகளுடன் சாதி கட்டமைந்துள்ளது. உயர்ந்த நிலையில் உள்ள சாதிகளாகக் கருதப்படும் மக்கள் பொருளாதாரத்திலும் பண்புகள் கலாச்சாரங்களிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் பிற சாதியினரிடமிருந்து வேறுபடுகின்றனர். அடிப்படைத் தேவைகளாகவும், பொருளாதாரத்தையும் உயர்த்திக் கொள்ள ஆதிக்கச் சாதியினரிடம் போராட வேண்டியுள்ளது.

**சாதியைத் தீர்மானிக்கும் காரணிகள்**

மனித இனம் தோன்றிய பொழுது பன்னெடுங்காலமாக சமுதாயத்தில் சாதி வேறூன்றி உள்ளதற்கான காரணங்களாகப் பல செயல்பாடுகள் உள்ளன. அதன் வளர்ச்சி நிலைகளில் பலவகையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இதனைச் சமுதாயத்தில் வெவ்வேறு வடிவங்களில் சாதி வெளிப்படுத்துகிறது. சாதியின் பல்வேறு வடிவங்கள் பிறப்பு முதல் இறப்பு வரை சமூகச் செயல்பாடுகளின் வழி நிகழ்த்தப்படுகிறது. அவை,

பிறப்பு, தொழில்கள், நம்பிக்கைகள், சடங்குகள் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமை, அடக்குமுறை, உதாசீனப் பேச்சுக்கள், பாலியல் வன்கொடுமை போன்றவை சாதியை தீர்மானிக்கும் காரணிகளாக உள்ளதை அனைத்து இடங்களிலும் காண முடிகிறது. இவ்வகைக் காரணிகள் சாதியை அடையாளம் காட்டுவனவாக உள்ளன. இமையம்; புதினங்களில்

காணப்படும் மேற்கண்ட செயல்பாடுகள் சாதியால் மட்டுமே தோன்றி சமூகத்தைப் பிரிக்கிறது என்பதைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக அமைகிறது.

அதிகார மொழியில்

ஆதிக்க சாதியினர் அதிகார மொழியில் தாழ்த்தப்பட்டவர்களை அடக்குகிறார்கள். என்னும் நிலையினை,

> "ஒரு குறிப்பிட்ட சாதியினர் தங்களுக்குள் இருக்கக்கூடிய சாதி அடக்கு முறையை ஆதிக்கத்துடன் வெளிப்படுத்தும் முகமாக மொழியின் தன்மை அமைந்திருக்கிறது. என்பதைக் காண முடிகிறது. உயர் சாதிக்காரர்களும் தாழ்த்தப்பட்டவர்களை அவமானப்படுத்துவதாக மொழி அமைந்துள்ளது. இத்தகைய மொழி நடை சாதிய மொழி நடை என்பதாகும்." (டாக்டர்.முத்துசண்முகம,; இக்கால மொழியியல் ப- 233)

இவ்வாறு மொழியும் சமுதாயமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக அமைந்துள்ளது. வட்டாரத்திற்கு வட்டாரம் பேசப்படும் மொழி வழக்கு வேறுபடுகிறது. குறிப்பிட்ட பகுதியில் பல்வேறு சாதிகள் இருந்தாலும் ஒரே மொழியைப் பேசினாலும் சாதிகளுக்கு இடையே மொழி வழக்கு என்பது வேறுபாட்டுடன் சாதிய அடையாளத்தையும் காட்டுகிறது

**சாதி அதிகார மொழி மீறல்**

கோவேறு கழுதைகள் புதினத்தில் ஆதிக்க சாதியினரின் இறப்பு நிகழ்வுக்காக தாழ்த்தப்பட்ட சாதியான வண்ணார்கள் தான் அனைத்து சடங்குகளையும் செய்ய வேண்டும். அவர்களை ஆதிக்கச் சாதியினர் பதத்தில் அதிகார மொழியிலேயே அழைப்பார்கள். மன்னர்களும் அடங்கிப் போன மொழிகளிலேயே பதிலையும் தெரிவிப்பார்கள் என்னும் நிலையையைக் காண முடிகிறது. ஆதிக்க சாதியினர் மொழி அதிகாரத்திற்கானது என்பதை,

> "முண்டப் பயல, தூக்கம் போவலியா? ஒரு கொரல்ல 'ஒனு' எழுந்திருக்க வாண்டாமா? வயசான காலத்துல இப்படியாடா தூக்கம் வரும்?"
>
> "கட்ட செத்த அசந்துபோச்சிங்க சாமி. தப்பிதமாக் கொள்ளாதீங்க சாமி."
>
> "மனசுல கவல இருந்தா மனுசனுக்குத் தூக்கம் வருமாடா? தூக்கம்தான் வருமா?
>
> "முண்டப் பயல. வாடா!"
>
> "சாமி?" என்றாள் ஆரோக்கியம்.
>
> "என்னடா நிக்கற?"

"சாமி?" (இமையம், கோவேறு கழுதைகள் ப- 16)

தெருவில் நடைபாதையில் உறங்குகிறார்கள் சவுரி குடும்பம். கோவிலுக்குச் சென்று வந்ததினால் அழுப்பும் களைப்பும் அவர்களை ஆழ்ந்த உறக்கம் கொள்ளச் செய்தது. அவ்வாறு ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் பொழுது, ஆதிக்க சாதியினரான ராமசாமி தன் தாயார் இறந்துவிட்டதாகவும் அதற்கான சடங்குகளை வண்ணார் சாதியில் உள்ளவர்களே செய்ய வேண்டும் இதனை தெரிவிப்பதற்காகவே ராமசாமி சவுரியையும், ஆரோக்கியத்தையும் மிகவும் அதட்டலுடன் அதிகார தோனியில் அழைப்பதை மேற்கண்ட வரிகள் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கதாக உள்ளது. உழைக்கும் மக்களுக்கு ஆதிக்க சாதியினரின் அடக்குமுறை என்பது இயல்பாகக் கேட்கும் சொல்லாடல் தான் என்பதை இதன் மூலம் உறுதி செய்ய முடிகிறது. தன் அதிகார மிரட்டலுடன் கூடிய வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டே நடந்து கொள்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சாதியினர் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் அவர்களை அதிகாரத்திற்கு கீழ்ப்பணிய வைக்கும் அதிகார மொழியைக் கையாளுகிறார்கள் என்பதனை மேற்கண்ட வரிகள் உணர்த்துகின்றது.

**செடல் புதினத்தில் சாதி கட்டமைப்பு**

தமிழ் சமூகத்தின் ஒற்றுமை பண்பாட்டில் மறைந்து உள்ளது வெளிப்படையான சாதி செயல்பாடுகள் காணப்படுகிறது என்னும் கருத்தினை,

> "குடித்தெருவில் செல்லியம்மன் கோவிலைச் சுற்றி பொட்டுக் கட்டுவதைப் பார்க்க உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் பெரும் கூட்டம் கூடியிருந்தது. செடல் வந்து விட்டால் என்று தெரிந்ததும் வேடிக்கை பார்க்க வந்த கூட்டம் எல்லாம் அவளைச் சூழ்ந்து கொண்டது சிதறி நின்றவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் குவியத் தொடங்கினார்கள்" 36
>
> "ஊர் உலகத்து முறைமைப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் சொல்லிவிட்டு பெரும் பிரச்சனை தீர்ந்த நிம்மதியில் பொட்டுக்கட்டி விட்டு விட்டதால் சீக்கிரம் மழை பெய்து விடும் என்ற நம்பிக்கையில் கிளம்பத் தொடங்கினார்கள் அவர்கள் ஒவ்வொருவருடைய காலிலும் செடலை விழுந்து கும்பிட வைத்தார் அயர்." (செடல் ப- 10)

பண்பாட்டு ஒற்றுமை காணப்பட்டாலும் மக்கள் அனைவரும் கூட்டமாக ஒன்று சேர்ந்து செயல்படும் பொழுது குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவர்களை வஞ்சிக்கும் நிலையை எடுத்துக் கூறுகிறது. பண்பாட்டு மரபு வழியில் ஏற்பட்ட நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் இதில் அடங்கியதாக அமைகிறது. சாதி மற்றும் பண்பாட்டு அழுத்தம் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் நடைமுறைப்படுத்துவதை எளிதாகக் கருதமுடிகிறது..

அனைத்துப் பிரிவு மக்களும் ஒற்றுமையாகச் சேர்ந்து மழைக்காக கூத்தாடியான செடலைப் பொட்டு கட்டினர். பொட்டு கட்டும் சடங்கைச் செய்வதால் வறட்சியால் வாடியிருக்கும் காலம் மாறி மழை பொழியும் என்று நம்பினார்கள். இந்த வழக்கம் அனைத்துத்தட்டு மக்களும் ஒற்றுமையாகச் செயல்படுவது பண்பாட்டு வழக்கம் உள்ளதை மக்கள் தெளிய உணர முடிகிறது.

**ஆறுமுகம் புதினத்தில் சாதிக் கட்டமைப்பு**

சமூகத்தில் உயர்ந்ததாக கருதப்படுகின்ற தொழில்களை உடையவர்கள் உயர்ந்தவர்களாகவும் பிறர் அவர்களுக்கு அடிமை வேலை செய்யும் தொழில்களினால் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கினார். சாதிக் கட்டமைப்பானது சமூகத்தில் பிரிக்க முடியாத சக்தியாக உருவானது இதனை,

> "சமுதாய ஆதாயம் தேடும் முயற்சியில் இரு ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினர் மீது ஏற்படுத்திய அத்துமீறல் சமுதாயத்தில் சாதி வர்க்க அமைப்புகளுக்கு வித்திட்டது." *(*பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல் ப*.314)*

என்று பக்தவச்சல பாரதி குறிப்பிடுகின்றார். ஆதிக்க சாதியினராகப் பெரும்பான்மை மக்களாக இருப்பதும் சிறுபான்மையினரான தாழ்த்தப்பட்ட மக்களிடம் பாரபட்சம் காட்டுவதே அடக்கு முறையாக கையாளப்பட்டது. ஒவ்வொரு சாதியினரிடையே காணப்படும் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் அவை சார்ந்த சிக்கல்கள் தம்மினும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற ஆதிக்க அத்துமீறல்கள் ஏற்பட்டன.

ஆதிக்க சாதியினரான நாயுடு வீடுகளிலும், கவுண்டர் வீடுகளிலும், சாதி அடுக்கில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் வீட்டு வேலைகளையும், பண்ணை வேலைகளிலும் பரம்பரைகளான அடிமை பறையன்களாக வேலை செய்வதைக் கடமையாக கருதினர். அவர்களின் வீடுகளில் நிரந்தரமான அடிமை வேலைகளைச் செய்வதால் பறையர்கள் ஆதிக்க சாதியினரை 'ஆண்டவோடு' என்று பெருமையாக அழைப்பதும் இன்றும் கிராமப்புறங்களில் பரவலாகக் காண முடிகிறது. கீழ்க்கண்ட வரிகள் இத்தகு நிலையை உண்மையான தென்பதை நிரூபிக்கும் வகையில் உள்ளதை,

> "வானூர் என்றாலே நாயுடுகளின் தாலுக்கா என்ற பெயர் ஒவ்வொரு நாயுடு வீட்டிலும் ஐந்தாறு கால் நடை குடும்பங்கள் அடிமை வேலை செய்யும் ராமனும் அடிமை பறையனாக வசந்தாவின் உடைய வீட்டில் தான் சின்ன வயதிலிருந்து வேலை செய்து கொண்டிருந்தோம் ராமனுடைய அப்பனும் அங்கே தான் வேலை செய்தான்."

"எங்கள் ஆண்டவோடு ஆண்டஊடு என்று சொல்லிக்கொண்டு வசந்தாவினுடைய வீட்டிற்கு இராச்சோறு வாங்க செல்வார்கள்." *(*வாழ்க வாழ்க ப*- 24)*

சாதிக் கட்டமைப்பில் ஆதிக்க சாதியினராகிய நாயுடு இன மக்களுக்குப் பறையர்கள் பரம்பரையாக அடிமை வேலைகளைச் செய்தார்கள் என்பதை அறிய முடிகிறது. ஆறுமுகம் புதினத்தில் உள்ள 'எங்க ஆண்ட ஊடு' என்று கூறும் வசந்தாவினுடைய போக்கும், அடிமைப் பறையன்களாக மூன்று தலைமுறைகள் இருந்ததற்கான சாதி அடக்குமுறை வெளிப்படுவதை இங்கு சுட்டிக் காட்டியுள்ளார் எழுத்தாளர் இமையம்;. சாதிய கட்டமைப்பில் பறையர்களை அடிமைகளாக நாயுடுகள் வைத்திருந்த நிலையை இதன் மூலம் அறிய முடிகிறது.

**உழைக்கும் மக்களின் நிலை**

மனித வாழ்க்கைக்கு உழைப்பு ஒன்றே மூலதனம். உழைக்கும் மக்களே உயர்வைப் பெறுகிறார்கள் என்பது தாழ்த்தப்பட்ட மக்களிடமே காணப்படுவது இல்லை. உழைப்புக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு என்பதைக் கடினமான வேலைகளையும் எளிமையாக முடிக்கும் திறன் அவர்களிடத்தில் காணப்படுகிறது. ஒரு வேளை உணவுக்காக நாள் முழுவதும் வேட்டையாடும் விலங்குகளை விடவும் கடினமாக உழைக்கிறார்கள். ஆதிக்க சாதியினரால் மிகக் கடுமையாக உழைக்க வைக்கப்படுகிறார்கள் என்பதே உண்மைநிலை. உழைப்பிற்கு ஊதியமாக ஒரு சில படி நெல் மட்டுமே வழங்கப்பட்டது. அதனால் உணவுக்காக உயர்ந்ததாக சொல்லப்படும் ஆதிக்கச் சாதியரை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை உருவானது. கோடிகளாகவும,; அடிமைகளாகவும் தாழ்த்தப்பட்டவர்கள் வைக்கப்படுகிறார்கள். சாதிக் கட்டமைப்பு தாழ்த்தப்பட்ட மக்கள் எப்பொழுது பிரிக்க, பிரித்து வைக்கப்பட்டார்களோ அன்று முதல் இன்று வரை உழைக்கும் வர்க்கமாகவே அவர்களின் வாழ்க்கை காலங்காலமாக நீடிக்கிறது. சமூகம் இன்றும் தாழ்த்தப்பட்டவர்களை உழைக்கும் வர்க்கமாகவே பார்க்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை சமூகத்தில் வெளிப்படுத்துவதை,

> "கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் சரி இன்னும் தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமட்டத்திலேயே கிடந்து கடைநிலை வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள். தங்கள் பிழைப்புக்காக பெருமளவும் உயர்சாதி மக்களின் தயவையே எதிர்பார்த்து அல்லது அண்டிவாழ வேண்டிய அவல நிலையே நீடித்து வருகிறது." (தீண்டாமை ஒழிப்போம் தமிழர் ஒற்றுமையும் ப- 78)

என்று ராஜேந்திர சோழன் கூற்றுக்கு ஏற்றபடி இமையம்; புதினங்களில் நிரூபணம் ஆகிறது. சாதி அடுக்கில் வேரூன்றி காணப்படும் கிராமங்களிலும், சாதியை மறைமுகமாக வெளிப்படுத்தும் நகர்ப்புறங்களிலும் சரி தாழ்த்தப்பட்ட மக்களை உழைப்பைச் சுரண்டி வஞ்சித்து வருகிறார்கள். பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக தாழ்த்தப்பட்ட மக்கள் உழைப்பதில்லை. அடிப்படைத் தேவையான உணவுக்கான தேடுதலே குறிக்கோளாகக் கொண்டு கடினமாக உழைக்கிறார்கள். அதற்காக உயர்சாதியினராகக் கருதப்படும் மக்களையே நம்பியும் அண்டியும் வாழ வேண்டிய நிலை இன்றும் நீடிக்கிறது.

"தவசமும் மின்னமாரி கொடுக்கிறது இல்ல. படியும் மோசமா இருக்கு காரியத்திலும் வண்ணானையே மறந்து விடுவாங்க. பழைய வயக்கம்மெல்லாம் இல்லாபூட்ச்சு ஆண்டவரே. ராத்திரிக்கு குண்டான் நிறைய மாட்டேங்குது. புள்ளகுட்டிய வச்சுக்கிட்டு தவசுபண்றன். காட்டுல வனவாசம் போன கதையா இருக்கு ஆண்டவரே." (கோவேறு கழுதைகள் ப- *9)*

கோவேறு கழுதைகள் புதினத்தில் வண்ணாராகிய ஆரோக்கியத்திற்கு போதிய கூலிகளையும் தானியத்தையும் வழங்கவில்லை என்று வருந்துவது அவர்களின் வாழ்வியலை எடுத்து இயம்புவதாக ஆசிரியர் சுட்டுகிறார். தவசம் கொடுப்பதில்லை என்று வருந்துவதிலிருந்து உழைப்புக்கேற்ற கூலிகளைக் கொடுப்பதில்லை என்பது இதன் மூலம் தெளிவாய்ப் புரிகிறது. தவசம் என்பது தானியம் ஆகும். முன்பெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிறைவான கூலிகளைக் கொடுத்ததாகத் தெரிகிறது. தற்பொழுது உழைப்பை மட்டும் பிடுங்கிக் கொண்டு அவர்களை உதாசீனப்படுத்துவதையும் இரவானதும் வாங்கப்படும் 'இராச்சோறு' எனும் பழைய உணவை கொடுப்பதற்கும் மனசு வருவதில்லை என்பதை இதன்மூலம் உணரமுடிகிறது. குடும்பத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உணவுக்காகவும், தானியங்களுக்காகவும் காத்திருப்பதை இங்கு பெரிதும் காண முடிகிறது. இந்தக் குறைகளை மன ஆதங்கத்துடன் கிறிஸ்தவ தேவாலயத்தில் உள்ள பாதிரியாரிடம் முறையிடுவதில் இருந்து அவர்களின் நிலைப்பாட்டைத் தெளிவாய் உணர முடிகிறது.

**அரசியல் அத்து மீறல்**

வறுமையின் காரணமாகப் பெண் குழந்தைகளையும், கட்சிப் பொதுக்கூட்டத்திற்கு செல்லும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சிறிய வருமானமே கிடைக்கும் அதற்காக நாள் முழுவதும் மழை வெயில்களில் காத்திருப்பதும் அதனால் நோய்கள், வர வாய்ப்புள்ள நிலையும் இங்கு பதிவு செய்யப்படுகிறது. அடிப்படைத் தேவைகளான குடிநீர் மற்றும் உணவும் கிடைப்பது அரிதாகவே இருக்கும். சிறுநீர் கழிப்பதற்கு ஏற்ற சரியான இடங்கள் இல்லாமல் குழந்தைகளும் பெண்களும் அவதிப்படும் நிலைக்கு தள்ள அரசியல் கட்சிக் கூட்டங்களுக்குச் செல்வோரின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கும். இதனை வாழ்கவாழ்க புதினத்தில் இடம்பெற்றிருப்பதை,

"ஐயோ பாவம்" என்று ஆண்டாள் சொன்னதும் பணத்துக்காக ஆசைப்பட்டு எதுக்கு அறியா பிள்ளை எல்லாம் இட்டாராங்க." (வாழ்க வாழ்க ப- *17)*

இங்கு காண முடிகிறது. இதிலிருந்து குழந்தைகள் முதல் வயதான பெண்கள் வரை காலையிலிருந்து கட்சிக் கூட்டம் முடியும் வரையில் சிறுநீர் கழிப்பதற்குக் கூட செல்லாமல் காத்திருப்பது தாக்கப்பட்ட மக்களின் அவல நிலையை குறிப்பிடுவதுடன் வருமானத்திற்காக இத்தகைய செயல்களைச் செய்வதும் கவனிக்கத்தக்கதாக உள்ளது. ஒரு நாள் முழுவதும்

பெரியவர்களும் பெண்களும் குழந்தைகளும் காத்திருப்பதை நான் கூட உழைப்புக்கு தகுந்த ஊதியத்தை தராமலும் அவர்களைத் துன்புறுத்துவதும் இதன் மூலம் தெளிவாகிறது.

**மூடநம்பிக்கையால் சமூக மீறல்**

நம் சமூகம் இயற்கைக்கு பயந்து மூடநம்பிக்கையா தெய்வத்திற்காக நேர்த்திக்கடன் செய்கின்றனர். விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுதல் நம்பிக்கையாக உள்ளது. இதனால் தெய்வத்திடம் இருந்து பாதுகாப்பாக இருப்பதாக உணரப்பட்டது. இதை பயன்படுத்தி மனிதர்களையும் கடவுளுக்காக நேர்த்திவிடும் மூட பழக்கங்களும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. இதனை,

> "மூடநம்பிக்கை என்பது ஏன் எதற்கு என்றுகூடக் கேட்காமல் முன்னோர்கள் சொன்னார்கள் என்பதற்காக அதை அப்படியே பொன்னேபோல் ஏற்றுக்கொண்டு நடப்பதாகும். "பார்க்க முடியாதது பரிசோதனைக்கு எட்டாதது ஆனால் முன்னோர்கள் பலகாலமாகச் சொல்லி வருவது என்பதற்காக நம்புவது மூடநம்பிக்கையாகும்" என்பர். நெ.து.சுந்தரவடிவேலு." (நெ.து.சுந்தரவடிவேலு-சிங்காரவேலரும் பகுத்தறிவும்இப-26)

மூடநம்பிக்கை என்பது கண்மூடித்தனமாக நம்புவது என்கிறார். அறிவியல் முறைப்படி பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் ஆணித்தரமாக நம்புவதாக உள்ளது என்கிறார். இதனையே, பெரியாரும்

> "பகுத்தறிவு ஆதாரமும், விஞ்ஞான ஆதாரமும், அனுபவ ஆதாரமும் இல்லாதது மூடநம்பிக்கை" (பெரியார் சிந்தனைகள் ப-1555)

எந்த ஆதாரமும் இல்லாமல் கண்மூடித்தனமாக நம்புவது மூடநம்பிக்கை என்கிறார். நம் தமிழ் சமுதாயம் மூடநம்பிக்கையில் வேரூன்றி கிடக்கிறது தற்பொழுதும் கூட என்பது புதினங்களில் காட்டப்படும் சடங்குகளில் இருந்து மனிதர்கள் நம்பிக்கையின் வழியே வாழ்கிறார்கள் என்பது தெரிகிறது.

> "50 வயது மதிக்கத்தக்க இதற்காகவே வரவழைக்கப்பட்டு இருந்த கர்னத்தம் லட்சுமி இடம் கொடுத்ததும், அதை செடலின் கழுத்தில் கட்ட சொன்னார் நடராஜபிள்ளை. அந்தத் தருணத்திற்காகவே காத்திருந்தது போல் பறை மேளக்காரர்கள் வேகமாக அடித்தனர். பரத்தெருநாதன் சங்கை ஊதி முடித்தான்.
>
> " அது இனி செல்லியம்மனோட புள்ள, அதெ இனிமே கொண்டு ஒருத்தரும் கைஉட மாட்டாங்க." (செடல் ப -10 )

என்று 7 வயதே நிரம்பிய தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த சிறு பிள்ளையை செல்லியம்மனுக்காக பொட்டுக்கட்டி விடப்பட்டு தெய்வத்துக்காக அர்ப்பணித்தார்கள் என்று தெரிகிறது. சமூகத்தில் மூடநம்பிக்கைகள் நிரம்பி வழிந்து ஓடுகிறது என்பது மேற்கண்ட சமூக அத்துமீறல்கள் மூலம் நிரம்பப்பட்டு உள்ளது. பெரியார் சொல்வது போல பகுத்தறிந்து அறிவியல் உண்மைகளுடன் செயல்பட்டால் மூடநம்பிக்கைகளும் மனிதனை விட்டு விலகும். முக்கியமாக ஆதிக்க சாதியினருக்கு அடிபணியாமல் இருந்தாலே போதும் மூடநம்பிக்கையை நம்பாமல் இருக்கலாம்.

**முடிவுரை**

தமிழ் சமுதாயக் கட்டமைப்பில் சாதிய அமைப்பில் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்துள்ளது. ஆதிக்க சாதியினரால் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவது புதினங்கள் வழியே அறிய முடிகிறது. படைப்பாளர் இமையம் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வியலை யதார்த்தமாக குறிப்பிடுவதுலிருந்து சமுதாயம் இன்றும் சாதிய ஏற்றத்தாழ்வுகளின் நிரம்பியுள்ளது என்று தெரிகிறது. இவ்வாறான அத்துமிறல்களை களைந்தெடுக்க வேண்டும். சமூகம் முன்னேற அனைவரும் சமம் என்ற போக்கு இருந்தால் மட்டுமே முடியும். சாதி அதிகார ஆணவத்தை கட்டுப்படுத்தி சமுதாய ஒழுங்குபடுத்த வேண்டும். உழைக்கும் மக்கள் அடிமையாக இல்லாமல் சரியான கூலிகளை நியாயமான முறையில் பெற முயல வேண்டுமே தவிர கடுமையாக இருக்க முயலக் கூடாது. அரசியல் அறம் மீறாமல் மக்களை பாதுகாக்கும் அறநாக அரசியல் இருக்க வேண்டும். முக்கியமாக சமுதாயத்தை பாதுகாக்க மூடநம்பிக்கைகளை தகர்த்தெறிந்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க உயர வேண்டும் .

**துணைநூற்பட்டியல்**

1.கோ கேசவன் சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும் ப – 24, சரவணபாலு பதிப்பகம் விழுப்புரம்
2. பண்பாட்டு மானுடவியல் ப - 314), அடையாளம் பதிப்பகம்
3. டாக்டர்.முத்துசண்முகம,; இக்கால மொழியியல் ப- 233, பாரி நிலையம் *(Paari nelaiyam)*
4. இமையம், கோவேறு கழுதைகள் ப- 16 , கிரியா பதிப்பகம்
5. இமையம், செடல் ப- 10, கிரியா பதிப்பகம்
6. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல் ப.314, அடையாளம் பதிப்பகம்
7. இமையம், வாழ்க வாழ்க ப- 24, கிரியா பதிப்பகம்
8. ராஜேந்திர சோழன், தீண்டாமை ஒழிப்போம் தமிழர் ஒற்றுமையும் ப- 78, தமிழினி வெளியீடு
9. இமையம், கோவேறு கழுதைகள் ப- 9
10. இமையம், வாழ்க வாழ்க ப- 17
11. நெ.து.சுந்தரவடிவேலு-சிங்காரவேலரும் பகுத்தறிவும்இப-26, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
12. பெரியார் சிந்தனைகள் ப-1555
13. இமையம், செடல் ப -10 , கிரியா பதிப்பகம்

**License**

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.